வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

Field Work Centre

தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017

Term Examination, November - 2017

தரம் :- 13 (2018)	இந்துசமயம்	இரண்டு மணித்தியாலங்கள்

- **01 முதல் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 5 விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதாவதொரு காரணத்தால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாததை இனங் காண்க.**

(1) (1) பிரதியட்சம் (2) அனுமானம் (3) ஆப்தவாக்கியம்
(4) உபமானம் (5) பிரகிருதி ( )

(2) (1) சாங்கியம் (2) ஜைனம் (3) வேதாந்தம்
(4) நியாயம் (5) சைவ சித்தாந்தம் ( )

(3) (1) சிவஞான போதம் (2) சிவஞான சித்தியார் (3) சிவப்பிரகாரம்
(4) ஞானவாசிட்டம் (5) திருவருட்பயன் ( )

(4) (1) பிரதிவிம்ப வாதம் (2) பரிணாமவாதம் (3) வேதாந்தம்
(4) நியாயம் (5) சைவசித்தாந்தம் ( )

(5) (1) ஸ்மிருதி (2) சங்கிதை (3) பிராமணம்
(4) ஆரணியகம் (5) உபநிடதம் ( )

- **06 தொடக்கம் 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்களில் ஒரு சோடி ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத சோடியைத் தெரிக.**

(6) 1. சிவஞான போதம் - மெய்கண்ட தேவர்
2. தேவாரம் - சம்பந்தர்
3. பெரிய புராணம் - சேக்கிழர்
5. கந்தபுராணம் - கச்சியப்ப சிவாச்சாரியார்
6. திருத் தொண்டர் திருவந்தாதி - பட்டினத்தார்

(7) 1. சங்கரர் - கேவாலத்து வைதம்
2. இராமானுஜர் - விசிட்டாத்துவைதம்
3. மத்துவர் - துவைதம்
4. வீர சைவர் - சக்தி விசிட்டாத்து வைதம்
5. மெய்கண்டர் - சிவசமவாதம்

(8) 1. பிரகிருதி - சாங்கியம்
2. ஆவணம் - சைவ சித்தாந்தம்
3. அவித்தை - வேதாந்தம்
4. திவ்ய தேசம் - வைணவம்
5. தரும பூதஞானம் - பௌத்தம்

The National e-Learning Portal for General Education

(9)	1.	நடராஜ மூர்த்தம்	-	மார்கழி திருவாதிரை
	2.	இலிங்கோற்பவ மூர்த்தம்	-	சிவராத்திரி
	3.	அர்த்த நாதீஸ்வரர்	-	கேதார கௌரி விரதம்
	4.	நந்தி	-	சோம வார விரதம்
	5.	கல்யாண சுந்தர மூர்த்தி	-	பங்குனி உத்தரம்
(10)	1.	கனகசபை	-	சிதம்பரம்
	2.	இரத்தின சபை	-	திருவாலங்காடு
	3.	தர்மிரசபை	-	திருநெல்வேலி
	4.	சித்திர சபை	-	திருக்குற்றாலம்
	5.	வெள்ளியம்பலம்	-	திருமறைக்காடு

11 -15 வரையுள்ள வினாக்களில் "அ", "ஆ" என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. "அ" நிரலில் உள்ளவை "ஆ" நிரலுடன் உள்ளவற்றுடன் ஏதோ ஒரு விடயம் தொடர்புடையவை. அ நிரலில் உள்ளவற்றை ஆ நிரலில் உள்ளவற்றுடன் ஒழுங்குபடுத்தும் ஐந்து சேர்மானங்களில் சரியானதாக அமைவதை தெரிவு செய்க.

(11)

அ		ஆ
1) விபூதி தரித்தல்	A -	உணவைக் குறைத்தேனும் விடுத்தேனும் மனம் பொறி வழிப்போகாது மெய்யன்புடன் கடவுளை நினைத்து வழிபடல்
2) உருத்திராக்கம் அணிதல்	B -	விதிப்படி செபிப்பதனால் ஆன்மாவில் திருவருட்சக்தியைப் பதிந்து, மெய்ஞ்ஞானத்தைப் பிரகாசித்து அருள்வார்
3) பஞ்சாட்சர மந்திரம் செபித்தல்	C -	மலங்கள் நீக்கப்பெற்று சிவத்துவப் பேற்றுக்கு அறிகுறியாதல்
4) பஞ்சாமிர்தம்	D -	இறைவனின் திருவருட் பேற்றுக்கு அறிகுறி
5) விரதம்	E -	மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம், தென், சக்கரை ஆகியவற்றின் கூட்டு

(1) ABECD (2) AEBCD (3) CDBEA (4) CDEBA (5) DCEA

(12)

அ		ஆ
1) திருக்களிற்றுப் படியார்	A)	100 வெண்பாக்களைக் கொண்ட சித்தாந்த சார்பு நூல்
2) சிவஞான போதம்	B)	சிவஞான போதத்தின் சார்பு நூல் என்பர் 100 விருத்தப்பாக்களால் ஆனது
3) சிவஞான சித்தியார்	C)	சித்தாந்த நூல்களில் முதல் நூல் 12 சூத்திரங்களையும் 81 வெண்பாக்களைக் கொண்டது
4) சிவப்பிரகாசம்	D)	சிவஞான போத்தின் வழிநூல், சிவஞான போதம் கூறும் 12 சூத்திரப் பொருளை 12 அதிகாரத்தால் விளங்குவது
5) திருவருட்பயன்	E)	சிவஞான போதத்திற்கு முற்பட்ட நூல் 100 வெண்பாக்களைக் கொண்டது

(1) AEBCD (2) BACED (3) CDABE (4) DAEBC (5) ECDBA

(13)

அ	ஆ
1) சாலோக முத்தி	A) மாணிக்கவாசகர்
2) சாமீப முத்தி	B) ஜீவன் முத்தர்
3) ஜீவன் முத்தி	C) திருநாவுக்கரசர்
4) சாரூப முத்தி	D) சுந்தர மூர்த்தி நாயனார்
5) சாயுச்சிய முத்தி	E) திருஞான சம்பந்தர்

(1) ABCDE (2) ADBEC (3) BDAEC (4) CEBDA (5) ECBDA

(14)

அ	ஆ
1) படைத்தல்	A) மௌனோற்சவம்
2) காத்தல்	B) தீர்த்தம்
3) அழித்தல்	C) தேர்த்திருவிழா
4) அருளல்	D) வீதி வலம் வருதல்
5) மறைத்தல்	E) கொடியேற்றம்

(1) ABCDE (2) CBADE (3) CDEAB (4) DCEBA (5) EDCBA

(15)

அ	ஆ
1) மகர தோரணம்	A) சுற்றுப் பிரகாரத் தெய்வங்கள்
2) கோபுரம்	B) ஆலய தரிசனத்தின் பலனைத் தருபவர்
3) பரிவார தெய்வங்கள்	C) தூண்பளில் இடம்பெறும் கலைவடிவங்களுள் ஒன்று
4) நாக பந்தம்	D) கோயில்வாயிலின் மேல் பல தளங்கள் கொண்டு கட்டப்படுவது
5) சண்டேஸ்வரர்	E) வாயிலை அலங்கரிக்கும் கலை வடிவம்

(1) ABCDE (2) CBEDA (3) ADECB (4) EDACB (5) DEACB

- **மேல்வரும் பகுதியில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்ட வொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் *16 - 21* வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவு செய்க.**

A உபநிடதம்	B சிலாபரீட்சணம்	C அத்வைதம்	D சித்தாந்த சிகாமணி
E அஜாதவாதம்	F குருஞான சம்பந்தர்	G அத்துவித முத்து	H தாண்டகம்
I விவர்த்த வாதம்	J பிரம்ம சூத்திரம்	K கோயிற் புராணம்	L உற்சவம்
M தாடலை	N சேக்கிழார் புராணம்	O கர்ஷணம்	P பதமுத்தி

(16) நாயக்கர் கால சைவ ஆதினங்களுடன் தொடர்புடைய தொகுதி

(1) A, F (2) B, F (3) F, D (4) D, I (5) H, I

(17) உமா பதி சிவாச்சாரியாருடன் தொடர்புடைய தொகுதி

(1) K, N (2) B, G (3) C,H (4) C, I (5) A, H

(18) சைவ நாற்பாதங்கள் கூறும் முத்தியுடன் தொடர்புடைய தொகுதி

(1) A,C (2) E,F (3) A,J (4) A,I (5) G,P

(19) ஏகான்ம வாதத்தை நிறுவுவதற்காக கையாளப்பட்ட உத்திகள்

(1) E,P (2) E,I (3) E,L (4) B,J (5) K,A

(20) ஆகமம் கூறும் கோயிற் கிரியைகளுடன் தொடர்புடைய தொகுதி

(1) D,H (2) F,G (3) A,G (4) L,O (5) A,H

(21) இறைவனின் இருப்புப் பற்றிய கருத்தியல் வாதத்தை முன்வைத்து நிறுவிய பெருமைக்குரிய நூல்கள்

(1) A,J (2) D, G (3) E, J (4) B, I (5) E, F

- **22 -30 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததை தெரிவு செய்க.**

(22) இருக்கு வேதத்தின் முதன்மை

(1) இந்திய இலக்கியங்களுள் காலத்தால் முற்பட்ட இலக்கியம் இருக்கு வேதமாகும்

(2) வைதீக சமயங்களின் வழிபாட்டிற்குரிய தெய்வங்கள் பலவற்றின் இயல்புகளை வெளிப்படையாக முதன் முதலில் குறிப்பிட்ட நூலும் இதுவே

(3) வேதங்கள் நான்கினுள் முதலில் வைத்துப் போற்றப்படும் வேதம் இருக்கு வேதமேயாகும்

(4) இருக்கு வேதம் அதர்வவேதம் போன்று பொது மக்களுக்கு நன்மை தரும் மந்திரங்களையும் தீமை தரும் மந்திரங்களையும் பெரிதும் குறிப்பிடுகின்றது

(5) "ரிதம்" எனப்பட்ட அண்டவியக்க முறைமைக்கும் படைப்புக்கும் வருணனே முதல்வன் என இவ்வேதம் குறிப்பிடுகின்றது.

(23) சிந்து வெளிச் சமூகமும் சமயமும்

(1) மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலான நகரங்கள் சிந்துவெளி நாகரிகத்தைப் பிரதிபலிப்பனவாகும்

(2) இங்கு வாழ்ந்த மக்கள் விவசாயத்தையும் வாணிபத்தையும் தமது அடிப்படைத் தொழில்களாகக் கொண்டிருந்தனர்

(3) இங்கு கண்டெடுக்கப்பட்ட யோகியின் வடிவம் சிவனின் தோற்றத்தை ஒத்ததென்பர்

(4) இம் மக்களின் வாழ்வியல் அம்சங்கள் ஆரியர் வழிவந்தன என்பர்

(5) இம் மக்களின் சமய நம்பிக்கை, வாழ்வியல் முறைமை என்பன திராவிட மக்களின் வாழ்வியல் அம்சங்களை ஒத்தன என்பர் அறிஞர்

(24) "இந்து இலக்கியங்களில் இராமாயணம்"

(1) இதிகாசங்களில் ஒன்றான இராமாயணம் வான்மிகியால் எழுதப்பட்டது

(2) இதனை தமிழில் துளசிதாசர் எழுதினார்

(3) இராம பிரானை காவியத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டது

(4) இராமாயண 24,000 சுலோகங்களை உடையது

(5) ஏழு காண்டங்களை உடையது

(25) தருமபுர ஆதீனம்

(1) கி.பி 1560 ஆம் ஆண்டு நமசிவாய மூர்த்திகளால் தோற்றுவிக்கப்பட்டது

(2) ஞான சம்பந்தன் எனும் மாதப்பத்திரிகையை வெளியிடுகின்றது

(3) சித்தாந்தக் கல்லூரி அமைத்து சைவசித்தாந்த கருத்துக்களைப் பரப்புகிறது

(4) தேவாரம் பாடசாலையை நிறுவி தெய்வத்தமிழ் வளர்க்கிறது

(5) தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறைக்குக் கிழக்கே அமைந்துள்ளது

(26) பல்லவர் காலமும் கட்டடக்கலையும்

1) பல்லவர் கால கட்டடக்கலை வளர்ச்சியின் ஆரம்ப கட்டமாக அமைவது குடைவரைக் கோயில்களாகும்

2) குகைகளைக் குடைந்து அமைக்கப்பட்ட குடைவரைக் கோயிலை ஆரம்பித்து வைத்தவர் நரசிம்மவர்மன் ஆவார்

3) இக்குடைவரைகளில் உள்ள கருவறைகளில் இறைவடிவங்களைக் காணமுடியவில்லை

4) இறைவடிவங்கள் சுதை அல்லது மரத்தால் அமைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதுவர்

5) மண்டகப்பட்டு, மாமண்டூர், வல்லம்

(27) காணபத்தியமும் கணபதி வழிபாடும்

1) கணபதியை முழு முதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயம் காணபத்தியமாகும்

2) மகாபாரதத்தை வியாசர் சொல்லச் சொல்ல விநாயகர் எழுதினார்

3) ஐயடிகள் காடவர் கோன் என்னும் பக்தர் திருநாரையூர் விநாயகர் திருவரட்டை மணி மாலையைப் பாடியுள்ளார்

4) கணபதியின் உடலில் எல்லாத் தெய்வங்களும் இருக்கின்றனர்

5) கணபதி தனக்கு மேல் தலைவன் இல்லாதவர் ஆதலால் விநாயகர் என்ற பெயரைப் பெறுகின்றார்

(28) சித்தத்தை இறை ஞானத்தில் வைத்த வழிபாடு செய்தவர்கள் சித்தர்களாவர்

1) ஆன்மார்த்த வழிபாட்டை சித்தர்கள் அறிமுகம் செய்தவர்கள்

2) பாம்பாட்டிச் சித்தர் ஈழத்துச் சித்தர்களில் குறிப்பிடத்தக்கவர் எனலாம்

3) திருமூலரின் திருமந்திரம் ஒரு சாதனை நூலாகும்

4) சைவ தத்துவத்தின் முதன் நூல்களைத் தெளிவான அடையாளம் காட்டிய பெருமைக்குரிய நூல் திருமந்திரம்

5) சித்தர்கள் அட்டமா சித்திகள் கைவரப் பெற்றவர்கள்

(29) பசுபதிச் செட்டியார்

1) சைவ பரிபாலன சபையின் பொருளாளர் ஆவார்

2) இந்து வாலிப சமாசத்தை உருவாக்கியவர்

3) திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணியில் ஈடுபட்டவர்

4) சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை நிறுவினார்

5) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர்களில் ஒருவராவார்

(30) தீட்சை

1) சமய தீட்சை என்பது பிரவேச தீட்சை என்றும் அழைக்கப்படும்

2) நிர்வாண தீட்சையைவிடவும் விசேட தீட்சை மகத்துவம் நிறைந்தது

3) தீட்சை அளிக்கும் தகுதி ஆசாரிய அபிடேகம் பெற்ற குருவுக்கே வண்டு

4) சமயதீட்சை பெற்றவரே உருத்திராக்கம் அணியும் அருகதை உடையவர்

5) பாசத்தைக் கெடுத்து ஞானத்தைக் கொடுக்கும் முறையே தீட்சையாகும்

சைவ சமயத்தின் சிறப்பு இலக்கியமான ஆகமங்கள் தொடர்பான விடயங்கள் கீழே தரப்பட்டள்ளன அதனை அடிப்படையாகக் கொண்டு *31 -35* வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

A - ஆகமங்கள் இறைவனாலே அருளிச் செய்யப்பட்ட சிறப்பு நூல் எனவும் இறைவனை அடைய வழிகாட்டும் நூல் எனவும் கூறப்படுகின்றது.

B - ஆகமங்களிலே உள்ள பத்ததிகள் கிரியைகள், வழிபாட்டு முறைகள் பற்றி எடுத்துக் கூறுகின்றன.

C - ஆகமங்கள் சமயம், தத்துவம்,வாழ்வியல், கலை பற்றிக் கூறுவதால் சைவ சமயத்தில் முக்கிய இடம்பெறுகின்றது.

D - சிவாகமங்கள் ஆலய அமைப்பினூடாக திருவுருவ வழிபாட்டை வகுத்து கூறுகின்றது

E - திருவுருவங்களை செதுக்குவதற்குரிய கருங்கல் பற்றி சிலாபரீட்சணம் என்ற நூல் கூறுகின்றது

F - சிவாகமங்கள் கோயிற்கிரியைகளை கர்ஷணம், பிரதிட்டை உற்சவம், பிரயாயசித்தம் என நான்கு வகைப்படுத்துகின்றது.

G - ஆகமங்கள் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மை, அவற்றின் இயல்பு, மும்மலங்கள் பற்றிக் கூறுகின்றது.

H - சிவாகமங்களின் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதம் போன்ற பிரிவுகளில் சைவசித்தாங்த சிந்தனைகள் பற்றி காணப்படுகின்றது

I - கோயிலில் இடம் பெறவேண்டிய பூசை விதிகள், அங்கங்கள், மந்திர உச்சாடனம், நிவேதனம், பொருள் பற்றி சிறப்பாகக் கூறுகிறது.

(31) ஆகமங்கயின் முக்கியத்தை வெளிப்படுத்தும் தொகுதி

(1) AG (2) AD (3) AC (4) CD (5) CE

(32) ஆகமங்கள் கூறும் கோயிற் கிரியைகளுடன் தொடர்புடைய தொகுதி

(1) BI (2) BF (3) FG (4) AF (5) GA

(33) ஆகமங்கள் வெளிப்படுத்தும் சைவ சித்தாந்த சிந்தனைகளுடன் தொடர்புடைய தொகுதி

(1) GH (2) GD (3) GE (4) ED (5) HI

(34) ஆலயக் கிரியைகளுடன் தொடர்புடைய தொகுதி

(1) FE (2) IE (3) AE (4) FI (5) AF

(35) ஆகமங்கள் கூறும் திருவருவ அமைப்பை கூறும் தொகுதி

(1) DF (2) EF (3) AE (4) EB (5) DE

36 தொடக்கம் *40* வரையான வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(36) உபநிடதமும் இந்து தத்துவங்களும்

1) வாழ்வியலில் சிந்தனைகளை எடுத்துக் கூறும் நூல் உபநிதடம்

2) உபநிடதம் மகாவாக்கிய விளக்கமே இந்து தத்துவங்களாகும்

3) சமண, பௌத்த தத்துவங்கள் தோன்ற மூலங்களாகும்

4) பிரபஞ்ச உண்மையை விளக்குபவை

5) ஆன்மா, பிரம இருப்பை விளங்குபவை

(37) பகவத் கீதையில் கர்மயோகம்

1) தாஸ்யம் முதலான ஆறு பாவங்கள் கூறப்படுகின்றது
2) 13 -18 ஆம் அத்தியாயம் வரையிலான பகுதியில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது
3) ஆசார பக்தி பிரபக்தி என இரு நிலைகளைக் கொண்டது
4) ஸ்வதர்மத்தின் வழியே ஸ்ரீ கிருஷ்ணரால் எடுத்தாளப்பட்டுள்ளது
5) பரவித்தை, அபரவித்தை பற்றிச் சிறப்பாகப் பேசுகிறது

(38) ஆகம சிற்ப சாத்திர வழிபாட்டு மரபு

1) சைவர்கள் இறைவனை நாட்டார் வழிபாட்டு மரபு சார்ந்ததும் ஆகம நெறி சார்ந்தும் வழிபடுகின்றனர்
2) ஆலயம் சிற்பசாத்திர நெறிமுறைகளுக்கமைவாகக் கட்டப்படுகின்றது
3) ஆலய வழிபாடு ஆகம, சிற்ப சாத்திர மரபுக்கு அமைவாகவே நடைபெறுகின்றது
4) ஆகமங்கள் கூறும் கலை மரபு அவற்றின் பொருள் மரபின் ஒரு பகுதியேயாகும்
5) ஆலய வழிபாடு ஆகமம் சார்ந்து நடைபெறுவது

(39) தட்சணாமூர்த்தி சுட்டும் தத்துவம்

1) சிவாலயங்களில் தென்திசை நோக்கி வீற்றிருப்பவர்
2) இறைவன் குருவாக எழுந்தருளிய வடிவமாகிய இது சிவமூர்த்தங்களுள் ஒன்றாக விளங்குகிறது
3) வியாக்யான தட்சணாமூர்த்தி சிவாலயங்களில் அதிகமாகக் காணப்படும்
4) பசுவானது பாசத்திலிருந்து நீங்கிப் பதியை அடைதலைச் சுட்டுகிறது
5) யோக தட்சணாமூர்த்தி, ஞான தட்சணாமூர்த்தி, வியாக்கியான தட்சணாமூர்த்தி, வீணாதர தட்சணாமூர்த்தி என நான்கு வகைப்படும்.

(40) கோகிப் பண்டிகை

1) பழையன கழித்தலும் புதியன புகுதலும் என்ற மொழிக்கேற்ப கொண்டாடப்படுகிறது
2) சூரியன் தனு இராசியிலிருந்து மகரராசிக்குச் செல்லும் நாளாகும்
3) சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் நாளாகக் கொள்ளப்படுகிறது
4) மாடுகளை அலங்கரித்து விருந்தளித்து வழிபடும் நாளாகும்
5) உழவர் திருநாள் என்று அழைக்கப்படும்

41 மதல் 50 வரையான வினாக்களுக்கு மிகவும் பொறுத்தமான விடையைத் தெரிவு செய்க.

(41) இந்து சமயக் கோட்பாடுகளின் மூலகங்கள் எனப்படுபவை

1) வேதம், புராணம், ஆகமம், தர்மசாத்திரம், இதிகாசம்
2) புராணம், இதிகாசம், நல்வழி, ஆகமம், தர்மசாத்திரம்
3) வேதம், கல்வெட்டு, புராணம், மணிமேகலை, சிலப்பதிகாரம்
4) வேதம், இதிகாசம், சாத்திரங்கள், தோத்திரங்கள், புராணம்
5) தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, புராணம்

(42) "வித்தியாநீதன்" என்ற விருதுப் பெயர் கொண்ட பல்லவ மன்னன்

1) இராஜசிம்மன் 2) நந்திவர்மன் 3) மகேந்திரவர்மன்

4) இராஜேந்திரன் 5) பரமேஸ்வரவர்மன்

(43) ஆலயக்கிரியைகளின் போது இடம்பெறும் குற்றநிவர்த்திக்காக ஆற்றப்படும் கிரியை

1) சிவலிங்கப்பூசை 2) காமியம் 3) பிராயச்சித்தம்

4) கர்ஷணம் 5) பிரமோற்சவம்

(44) உமாபதி சிவாச்சாரியார் செய்த அற்புதங்கள்

1) நூல்கள் இயற்றியமை, சைவத்தை வளர்த்தமை

2) பாடல்கள் பாடியமை, பெற்றான் சாம்பனுக்கு முத்தி கொடுத்தமை

3) பாடல்பாடி கொடியேற்றியமை, தில்லையை விட்டு நீங்கியமை

4) பாடல்பாடி கொடியேற்றியமை, சைவத்தை வளர்த்தமை

5) பெற்றான் சாம்பனுக்கு முத்தியளித்தமை, முள்ளிச்செடிக்கு முத்தி கொடுத்தமை

(45) திருஞான சம்பந்தர் பற்றிய வரலாற்றைக்கூறும் நூல்கள்

1) பெரிய புராணம், திருவாரூர் புராணம்

2) பெரிய புராணம், மறையசையந்தாதி

3) திருத்தொண்டர்புராணம், சீர்காழித்தல புராணம்

4) பெரிய புராணம், திருக்கோவையார்

5) திருத்தொண்டர் திருவந்தாதி, சிவபெருமான் மும் மணிக்கோவை

(46) விநாயகரின் திருவுருவில் எழுத்தாணி பிடித்த கரம் உணர்த்துவது

1) படைத்தல் 2) காத்தல் 3) அழித்தல் 4) மறைத்தல்

5) அருளல்

(47) உபநிடதம் ஞானிகள் மட்டும் அடங்கும் தொகுதி

1) சனற்குமாரர், நசிகேசன், சிவன் 2) உத்தலாகர், பிரஜாபதி, விஷ்ணு

3) நாரதர், வசிட்டர், நசிகேதன் 4) உத்தலாகர், யமன், மைத்திரேஜி

5) இந்திரன், வர்ணன், சோமன்

(48) சிவ வடிவங்களுக்குரிய அளவுப் பிரமாணம்

1) பஞ்ச தாளம் 2) உத்தம தசதாளம் 3) மத்திம தசதாளம்

4) மத்திம நவதாளம் 5) உத்தம நவதாளம்

(49) பெரிய கவி எனச் சிறப்பிக்கப்படும் குப்த மன்னன்

1) சந்திரகுப்தன் 2) குமாரகுப்தன் 3) சமுத்திர குப்தன்

4) புதகுப்தன் 5) ஸ்கந்தகுப்தன்

(50) விட்டலாசுவாமி கோயில் யாரால் அமைக்கப்பட்டது

1) மகேந்திர வர்மன் 2) பாண்டிய மன்னன் 3) நந்தி வர்மன்

4) கிருஷ்ண தேவராயர் 5) நரசிம்ம வர்மன்

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

Field Work Centre

தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017

Term Examination, November - 2017

தரம் :- 13 (2018)	இந்துசமயம்	மூன்று மணித்தியாலங்கள்

பகுதி - II

பகுதி I இல் இருந்து *2* வினாக்களையும் II இலிருந்து *3* வினாக்களையம் தெரிவு செய்து மொத்தமாக *5* வினாக்களுக்கு விடை தருக.

பகுதி - I

(1) சிவாகமங்கள் இந்து சமயத்தை வளம்படுத்தியவற்றை மேல் வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.

அ) ஆகமம் என்பதன் பொருளையும் காலத்தையும் தருக?

ஆ) ஆகமம் கூறும் ஆலய அமைப்பை தருக?

இ) தத்துவ கோட்பாடுகள் பற்றி விளக்குக? (4 + 8 + 8 = 20 புள்ளிகள்)

(2) "சித்தத்தை சிவன்பால்" கொண்டவர்கள் சித்தர்கள்

அ) சித்தர்களுக்குரிய இயல்புகளைக் குறிப்பிடுக?

ஆ) சிவவாக்கியரின் போதனைகளை சுருக்கமாக குறிப்பிடுக?

இ) திருமந்திர நூலின் உள்பொருள் பற்றி சுருக்கமாக தருக. (4 + 8 + 8 = 10 புள்ளிகள்)

(3) இந்து சமய தத்துவங்களிற் சைவ சித்தாந்தம் தனித்துவம் பெற்று விளங்குகிறது இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேலுள்ள தலைப்பில் ஆராய்க?

அ) சைவ சித்தாந்தத்திற்குரிய பிரமான நூல்களும் அவற்றின் சிறப்பம்சங்களும்

ஆ) முப்பொருள் உண்மை

இ) ஆன்மீக விடுதலைக்கான வழிகள் (8 +8 + 4 = 20 புள்ளிகள்)

பகுதி - II

(4) "இந்து தரிசனங்களில் யோக தத்துவம் ஒரு முக்கியமான பிரிவாகும்"

1) யோகம் என்பதன் பொருள்
2) அதன் பிரமாண நூல்
3) அட்டாங்கமும் யோகமும்
4) யோக தத்துவம் கூறும் கோட்பாடுகள் (2 +2 + 8+8 = 20 புள்ளிகள்)

(5) "இந்து சமய வளர்ச்சியில் ஊடகங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன"

1) ஊடகம் என்பதன் விளக்கமும் உதாரணமும் தருக
2) சைவ சமய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பு பற்றி தருக
3) ஊடகங்களின் தன்மைகள் பற்றி தருக? (4 +8 + 8 = 20 புள்ளிகள்)

National Learning Portal for The General Education

(6) நாட்டுப்புற கலைவடிவங்களில் கரகம் பெறும் செல்வாக்கினைத் தருக. *(20 புள்ளிகள்)*

(7) சங்கரர் வேதாந்தத்தை அடிப்படையாக கொண்டு மேல் வருவனவற்றை ஆராய்க.

1) அத்வைத விளக்கமும் சங்கரர் ஏற்றுக்கொள்ளும் பிரமாணங்களும்
2) சங்கரர் வேதாந்தத்தில் பிரமம் பெறும் முக்கியத்துவம்
3) ஆன்மாவும் ஆன்ம விடுதலைக்கான வழிமுறைகளும் *(4 +8 + 8 = 20 புள்ளிகள்)*

(8) எவையேனும் நான்கிற்கும் சிறுகுறிப்பு தருக.

அ) சக்தி வழிபாடு ஆ) சைவபரிபாலனசபை
இ) நடராஜமூர்த்தம் ஈ) திருக்கேதீஸ்வரம்
உ) பெரியாழ்வார் **(4 x5= 20 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

Field Work Centre

தவணைப் பரீட்சை, நவம்பர் - 2017

Term Examination, November - 2017

தரம் :- 13 (2018)	இந்துசமயம்	புள்ளித்திட்டம்

(1) 5	(11) 3	(21) 1	(31) 3	(41) 1
(2) 5	(12) 5	(22) 4	(32) 2	(42) 5
(3) 4	(13) 4	(23) 4	(33) 1	(43) 3
(4) 2	(14) 5	(24) 2	(34) 4	(44) 5
(5) 1	(15) 4	(25) 2	(35) 5	(45) 3
(6) 5	(16) 3	(26) 2	(36) 3	(46) 1
(7) 4	(17) 1	(27) 3	(37) 4	(47) 4
(8) 5	(18) 5	(28) 3	(38) 3	(48) 2
(9) 4	(19) 2	(29) 4	(39) 1	(49) 3
(10) 5	(20) 4	(30) 2	(40) 1	(50) 4

(50 x 2 = 100 புள்ளிகள்)

(1) 1) தொன்று தொட்டு வரும் அறிவு என்பது பொருள் அல்லது ஆன்மா மல நாசம் பெற்று இறைவனை அடைய வழிகாட்டும் நூல்.

ஆ - பசு
க - பதி
ம - பாசம்

அதாவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களை உணர்த்தும் நூல்

ஆகமம் என்பதில் உள்ள ஆ. சிவஞானம், க - மோட்சம், ம- மலநாசம் அதாவது மலத்தை நாசம் பண்ணி, சிவஞானத்தை உதிப்பித்து மோட்டசத்தை நல்குவது எனவும் பொருள்படும்.

b) புராண இதிகாசத்திற்கு முற்பட்ட காலம் திருமந்திரத்திற்கு முற்பட்ட காலம்

2) ஆலய அமைப்பு:-

மக்களின் ஆன்மீக வாழ்வு ஆகமங்களை மையமாகக் கொண்டு கூறுகின்றன. வேதங்கள் கூறும் அக்கினி வழிபாடும் சாதாரண மக்களுக்கு ஏற்புடைய உருவ வழிபாடும் சிவாகமங்களில் இணைக்கின்றன.

சிவாகமங்கள் ஆலய அமைப்பு, இடம் தெரிவு. செய்வது தூய்மைப்படுத்தல் கர்ஷ்ணம் எனக் கூறப்படுகிறது.

கட்டிட அமைப்புக்கள் அமைய வேண்டிய இடங்கள் அளவைப் பிரமாணங்கள் போன்றவற்றை விரிவாக விளக்குகின்றன.

பிரகார லட்சண விதிப்படலத்தில் பிரகாரம் அமைக்கும் முறைகள் கூறப்படுகின்றது. சிலாபரீட்சணம் என்ற தலைப்பில் சிவாகமங்கள் திருவுருவங்களை செதுக்குவதற்கு

கருங்கல்லை தெரிவு செய்யும் முறை பற்றிக் கூறுகின்றது. (ஆலய அமைப்பு திசைகள் பற்றி கூறுதல்) (8புள்ளிகள்)

3) தத்துவக் கோட்பாடு

சிவகாமங்கள், யோகாபாதம், ஞானபாதம் என்பவற்றில் சைவசித்தாந்த கருத்துக்கள் உண்டு.கிரணம், சௌரவம், பௌஷ்கரம் ஆகிய ஆகமங்களில் சித்தாந்த சிந்தனைகள் பதி, பசு,பாசம் முப்பொருளுண்மை அவற்றின் இயல்பு, மூவகைத்திருமேனிகள் அவற்றின் இயல்புகள், ஐந்தொழில்கள் ஆன்மா ஈடேற்றம், மும்மலம் என்பவற்றைக் கூறுகிறது கிரண, ஆகமம், பதி, படலம் போன்ற தலைப்புக்களில் சைவ சித்தாந்த உண்மைகள், நாற்பத நெறியினூடாக குருலிங்க சங்கமவழிபாடு சிவசின்னங்கள் பற்றிய விளக்கம் சத்தினிபாதக் கோட்பாடு. முத்திக் கோட்பாடு (8 புள்ளிகள்)

(2) 1) இயல்புகள் :-

- சித்தத்தை இறைஞானத்தில் வைத்து வழிபாடு செய்தவர்கள்
- இறை உணர்வோடு வாழ்பவர்கள்
- அட்டமா சித்திகள் கைவரம் பெற்றவர்கள்
- ஆன்மார்த்த வழிபாட்டை அறிமுகம் செய்தவர்கள்
- சமூதாயத்துடன் சேர்ந்தும் வாழ்பவர்கள்
- ஆசாரங்களுக்கு உட்படாதவர்கள்

2)

- புரட்சிகரமானது
- ஒன்றே குலம் ஒருவனே தேவன் உள்ளமே பெருங்கோயில்
- சாதி வேறுபாடுகளை கலைத்து சமய சமரச சன்மார்க்க நெறியைப் பரப்பியவர்கள்
- சடங்கு முறை உண்மைகள், சமயநெறி, கோயில் வழிபாடுகள் முதலான
- புற செயல்களை விட உண்மையான வழிபாட்டை இவர்கள் ஏற்றுக் கொண்டார்
- அறிவாராய்ச்சியால் அன்பு நெறியை உயர்த்தியவர் (8புள்ளிகள்)

3)

- யோக சாதன நூல் - மந்திர சாத்திரம் தந்திர சாத்திரம் எனப் போற்றப்படும்
- தர்மசாத்திரமாகவும் விளங்கும் சிறப்புடையது
- அண்டவியல், வானிலை, கணிதவியல் உள்ளிட்ட இந்துக்களின் பௌதீக அறிவியல் பற்றிய குறிப்புக்கள் செறிந்துள்ளன.
- சைவ தத்துவத்தின் முதன் நூல்களைத் தெளிவாக அடையாளங் காட்டிய சிறப்பு
- சமயம், தத்துவம், அறிவியல் ஆகியவற்றை ஒருங்கே தரும் கலைக்களஞ்சியம்
- 9 தந்திரங்களைக் கொண்டது (8புள்ளிகள்)

(3) 1) சைவத்தின் முடிந்த முடிவு - பிரமாணநூல் - வேதம் பொது ஆகம சிறப்பு, திருமுறைகள் மெய்கண்ட சாஸ்திரங்கள் - மெய்கண்ட சாஸ்திரங்கள் பற்றிய விளக்கம்

2) முப்பொருள் உண்மை - பதி, பசு, பாசம் ஆகியவற்றை உண்மைப்படுத்தும் பிரமாணங்களுடாகவும் சாஸ்திர நூல்கள் கூறும் எடுத்துக் காட்டுக்கள் மூலம் விளங்க வைக்க வேண்டும். (8புள்ளிகள்)

3) சைவ நாற்பாதங்கள், குரு, லிங்க, சங்கம வழிபாடு, விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம், என்பன பற்றி விளக்க வேண்டும். (4புள்ளிகள்)

(4) 1) பிரகிருதியிடமிருந்து பிரிதல், இறைவனிடம் இணைதல் (2புள்ளிகள்)

2) யோக சூத்திரம் பதஞ்சலி (2புள்ளிகள்)

3) இறைக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளல் பதஞ்சலி கூறும் நான்கு பிரதான விடயங்களைக் குறிப்பிட வேண்டும்

புருட பிரகிருதித் தத்துவத்தை விளக்க வேண்டும் - கைவல்ய நிலை பற்றிய விளக்கம் இடம் பெற வேண்டும்.

இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம் 5 , பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி (8புள்ளிகள்)

4) பிரகிருதியிலிருந்து பிரிதல், இறைவனிடம் இணைதல் சாங்கியம் ஏற்றுக் கொண்ட புருடன் பிரகிருதி என்னும் அடிப்படைக் கோட்பாடுகளை யோக தத்துவமும் ஏற்றுக் கொள்கிறது. சாங்கியம் ஏற்காத அறைக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்கிறது. - புருடன் - பிரகிருதி கைவல்லிய நிலை பற்றி விளக்கம் படவேண்டும். (8புள்ளிகள்)

(5) 1) ஊடகம் என்பது மக்களுக்கு தகவல்கள், செய்திகள் போன்வற்றை வழங்குகின்ற தகவல் தொடர்புச் சாதனங்களை குறிக்கும்

உ + ம் :- நாளிதழ், வானொலி

தொலைக்காட்சி, இணையம் (4புள்ளிகள்)

2)
- ✦ இந்து சமய கருத்துக்கள், இந்து சமய நெறிமுறைகள் வழிபாட்டு மரபுகள், தத்துவ சிந்தனைகள் என்பவற்றை சமுதாயத்தில் செல்வாக்கு பெறவும் வாய்ப்பு உண்டாகும்.
- ✦ சமய அறிவுப் போட்டிகள், பேச்சுக்கள் சமயகல்வி தொடர்பான விடயங்கள் வளர்ச்சியடைய உதவுகின்றன.
- ✦ பிரசங்கம், புராண படலம், நாடகங்கள் என்பவற்றினூடாக பக்தி, சமயஉணர்வு, வளர்க்கப்படுகின்றது.
- ✦ ஆலயங்களில் நடைபெறும் திருவிழா, கும்பாபிஷேகம் என்பவற்றை பத்திரிகை, வானொலி, இறுவெட்டுக்களினூடாக அறியும் சந்தர்ப்பம் ஏற்படும். (8புள்ளிகள்)

3) ஆதார பூர்வம், நம்பகத் தன்மை, உண்மைத்தன்மை என்பவற்றுடன் தார்மீக பொறுப்புடன் இருத்தல் வேண்டும் மேலதிகமான விளக்கங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும்.
(8புள்ளிகள்)

(6) 1) கரகம் என்பதன் பொருள் விளக்கம்
அலங்கரிக்கப்பட்ட செம்மை பித்தளையிலான குடத்தை ஆட்டக்காரர் தலையில் வைத்துக் கொண்டு மேளப் பின்னனிக்கு ஏற்றவாறு குடம் கீழே விழாதவாறு ஆடும் ஆட்டம் கரகாட்டம் ஆகும்.

2) கரகம் என்பதன் வேறுபெயர்
புனித நீர்தாங்கும் குடம், கமண்டலம், குடம் கும்பம், செம்பாட்டம், பூங்குடம், பூம்பந்தல், கரககூத்து

3) கரகத்தின் தோற்றம் பற்றிய நூல்கள்
தொல்காப்பியம் - "கரகங்க வீழ்ந்த காவிரிப்பாவை"
நூலே கரகம்..."

4) கரகம் ஆடுவதன் நோக்கம்

நாட்டில் வரட்சி, நோய் ஏற்படும் போது அதில் நின்று மீளும் பொருட்டு அம்மன் மீதும், மாரி அம்மன் மீதும் கரகம் எடுப்பார். நேர்த்தியின் பொருட்டு கரகம் எடுப்பார்.

5) அரங்கு - ஆலயமுன்றல்

அறுவடை விழா

6) கரகம் அமைப்பதற்கு தேவையானவை

செம்பு, தண்ணீர், வேப்பிலை, நூல், அரளிப்பூ, தேம்பூ முதலானவையும் கிளி, அன்னம், புறா போன்ற தக்கைப் பறவை உருவங்களும் தேவையாகும்.

7) பயன்படுத்தப்படும் வாத்தியம்

தவில், நாதஸ்வரம், குழல், தாளம், பாறை, உடுக்கு

8) கரகத்தின் அமைப்பு, ஆடுபவரின் தோற்றம் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள் சமய, சமூக முக்கியத்துவம் என்பன பற்றி குறிப்பிடுகின்றது.

(7) 1) ஆ + துவைதம் - இரண்டல்ல, பிரம்ம மட்டும் உண்மை

அ - அல்ல - துவைதம் - இரண்டு

அல்ல இரண்டு எனவே பிரமம் மட்டும் உண்மை

பிராமணங்கள் - பிரத்தியட்சம்

அனுமானம்

ஆப்தவாக்கியம்

உவமானம்

அனுவாபக்தி

அருத்த பக்தி

2) பிரமம் மட்டும் உண்மை ஏனையவை யாவும் அதன் தோற்றம்

- அநாதியானது, அந்தமற்றது, அழிவில்லாதது
  எங்கும் செறிந்து நீக்கமற நிறைந்து இருப்பது
  பிரமத்தின் இருநிலைகள் - I நிற்குணநிலை
  II சகுணநிலை
- நிற்குணநிலை - மாயையோடு சேராதநிலை
  சகுணநிலை - மாயையோடு சேர்ந்த நிலை
- மகாவாக்கியங்கள் - தத்துவமஸி
  அகம் பிரமாஸ்மி
  சோகம், அஸ்மி
  என்னும் மகாவாக்கியங்கள் இதற்கு அடிப்படை
- பிரம்மமும் மாயையும் - பிரமம் ஒன்றே அஞ்ஞானத்தின் காரணமாக பலவகை பொருட்களாக காட்சியளிக்கின்றது.

- ✦ அவித்தையாகிய அஞ்ஞானத்திலிருந்து விடுதலை பெறுமிடத்து பிரம்மமே எங்கும் பரந்தும் இருக்கும் பரிபூரண பொருள். *(8புள்ளிகள்)*

3) சங்கரர் ஆன்மாவுக்கு இருநிலை கூறுவர்

- ✦ பரமாத்மா - (என்றும் உள்ள பொருள்)
- ✦ ஜீவாத்மா - (அவித்தைக்கு உட்பட்டது)
- ✦ ஜீவாத்மாவும் பரமாத்மாவும் - ஒன்றென நிறுவும் வாதங்கள் (அவச்சேத வாதம் - பிரதிவிம்ப வாதம்)
- ✦ அவித்தை ஆகிய அஞ்ஞானத்தினாலே ஜீவன் தன்னை பிரமத்திலிருந்து வேறுபட்டதாக எண்ணுகிறது.

ஆன்ம விடுதலை

- ✦ சங்கரர் ஞானத்துக்கு முதன்மை அளிப்பவர்
- ✦ ஆன்மா அவித்தையில் இருந்து விடுபட்டு தன்மை பிரமம் என உணர்தல் விடுதலை
- ✦ சங்கரர் கூறும் முத்தி - அத்துவித முத்தி - தன்மை பிரமம் என்று உணரும் அத்வைத அனுபவம்
- ✦ ஜீவன் முத்தி விதேக முத்தி இரண்டும் குறிப்பிடுவார். *(8புள்ளிகள்)*

(8) சிறுகுறிப்பு

1) <u>சக்தி வழிபாடு</u>

சாக்த தந்திரங்களுள் மகா நிருவாண தந்திரம், சக்தி வழிபாடு பற்றியும் ஆசாரங்கள் பற்றியும் கூறுகிறது. சாக்த ஆகமங்கள் பொதுவாகத் தந்திரங்கள் என்றே கூறுவர். இவை தவிர தேவி பாகவதம், சௌந்தர்யலஹரி, துர்க்கா ஸ்தோத்திரம் என்பன தோத்திர நூல்களாகும். சரஸ்வதி அந்தாதி, சகலகலாவல்லி மாலை அபிராமி அந்தாதி என்பன. உபாசனையாக விளங்குகின்றன. சக்தியின் அடையாளங்களாக ஸ்ரீ சக்கர முக்கியஇடம் பெறுகின்றது. குங்கும பிரசாதம் முக்கிய இடம் பெறுகின்றது. யந்திர வடிவில் இறைவனை வழிபடும் முறை காணப்படுகின்றது. புராணக் கதைகளாக மகிடாசுரவதம், அம்பு நிசாம்பவதம் என்பன முக்கியம் பெறுகின்றது.

2) <u>அறிமுகம்</u>

சைவத்தையும் தமிழையும் போற்றிப் பாதுகாத்த நாவலரது வழியில் அவரது சிந்தனைகளையும் கொள்கைகளையும் சைவ மரபைப் பேணிப் பாது காப்பதற்காக உருவாகியதே சைவ பரிபாலன சபையாகும். இது 1888ம் ஆண்டு 10ம் மாதம் 29ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சைவசமய பரிபாலன சபை 1892. 09.17 இல் சைவபரிபாலன சபை எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

<u>சபை நிறுவப்பட்டதன் நோக்கம்</u>

- ✦ சைவத்தின் வளர்ச்சிக்கும் பிரசாரத்திற்கும் ஊக்கமளிப்பது
- ✦ சைவக்கோவில்களைத் தாபித்தல், பழுது பார்த்தல், திருத்தி அமைத்தல் கோவில்களைப் பொறுப்பேற்று நடத்துதல்.
- ✦ சைவப் பிள்ளைகளுக்கான நூல்களைப் பிரசுரித்தல்

பணிகள்

- இந்து சாதனம் எனும் பத்திரிகை தமிழில் வெளியிடப்பட்டது
- ஆங்கிலத்தில் Hindu orga என்ற பெயரில் வெளியிடப்பட்டது
- வருடந்தோறும் தமிழக அறிஞர்களும் எமது நாட்டு அறிஞர்களும் பங்கு கொள்ளும் சைவமாநாட்டை நடாத்துதல்.
- இச் சபை நாவலரதும், அவரது பரம்பரையினதும் சமய நூல்களையும் மறு பிரசாரம் செய்தல்
- பாடசாலை மாணவர்களிடையே பரீட்சை நடாத்தி சைவமா நாட்டின் போது பரிசில்களை வழங்கி ஊக்கமளித்தல்

நடராஜ மூர்த்தம்

சிவனின் மூர்த்தங்களில் ஒன்று பஞ்ச கிருத்திய விளக்கம் தோற்றம் துடியதனில்.... உரை விளக்கம் தூல, சூக்கும பஞ்சாட்சரங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு நோக்கப்படுகிறது. திரு வைந்தெழுத்தின் தொடர்பு ந -திருவடி ம - திருவயிறு சி - திருத்தோள் வா - திருமுகம், ய - திருமுடி சைவசித்தாந்தம் , திருமந்திரம், புராணம் முதலானவை நடராசரைப் போற்றும் பண்பு கொண்டவை குனித்த புருவம் - அப்பர் பாடல் ஏனைய விளக்கங்கள்

திருக்கேதீஸ்வரம்

- இலங்கையில் மன்னார் மாவட்டத்தில் மாந்தை எனும் ஊரில் சிவாலயம் (வரலாற்றுக் கதைகள்)
- பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்று
- கேதுவால் வழிபடப்பட்டது
- பாடல் பெற்ற திருத்தலம் -சம்பந்தர், சுந்தரர்
- திருக்கேதீஸ்வரநாதர் - இறைவன்
- கௌரி அம்மாள் - இறைவி
- பாலாவி - தீர்த்தம்
- வன்னிமரம் - தலவிருட்சம்
- 40 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது
- பஞ்சலிங்கங்கள் 63 நாயன்மார் திருவுருவங்கள்
- சிவராத்திரி விழா சிறப்பானது
- மகோற்சவசாலம், தொடர்பான நூல்கள் ஏனையவிடயங்கள் எழுதப்பட வேண்டும்

பெரியாழ்வார்

பாண்டி நாட்டில் வில்லி புத்தூரில் தந்தை - முகுந்தர்

தாய் - பதுமை

ஆனிமாத சுவாதி நட்சத்திரம் அவதரித்தார்

மறுபெயர் - விஸ்ணு சித்தர், பட்டத்பிரான்

பிரபந்தங்கள் - திருப்பல்லாண்டு , பெரியாழ்வார் திருமொழி

பணிகள்

- நந்தவனம் அமைத்து மலர் கொய்து மாலையாக தொடுத்து திருமாலுக்கும் சாத்தும் திருப்பணி
- இறை அருளால் பொற்கிளி பெற்று ஸ்ரீ வில்லிபுத்தூரில் கோயில் கட்டி பூசைக்குரிய மலர் மாலை கொடுத்து வந்தார்